**செய்தி வெளியீடு எண்: 416** **நாள் : 11.07.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழ் நாடு பொறியியல் சேர்க்கை – 2019

பொறியியல் இணையதள கலந்தாய்வு

முதல் சுற்றுக்கான தற்காலிக சேர்க்கை ஒதுக்கீடு 11/7 அன்று இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஒதுக்கீடு பெற்ற அனைவரும் 12-ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள் உறுதி செய்ய வேண்டும்.

**மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அறிவிப்பு.**

பொறியியல் இணையதள கலந்தாய்விற்கு மொத்தம் 1,01,692 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தரவரிசைப் பட்டியல்படி 4 சுற்றுகளில் இணையதள கலந்தாய்வில் பங்கேற்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, முதல் சுற்றில் தரவரிசைப் பட்டியல் 1 முதல் 9872 வரையிலும்,

2வது சுற்றில் தரவரிசைப் பட்டியல்படி 9873 முதல் 30926 வரையிலும்,

3வது சுற்றில் தரவரிசைப் பட்டியல்படி 30927 முதல் 64093 வரையிலும்,

இறுதி கட்டமாக 4வது சுற்றில் தரவரிசைப் பட்டியல்படி 64094 முதல் 101692 வரை என 4 சுற்றுகளாக அழைக்கப்பட்டுள்ளனர்.

இதில் முதல் சுற்றில் 3-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை கட்டணம் செலுத்த காலஅவகாசமும், கல்லூரி/பாடப்பிரிவு (Choice Locking) தேர்வு செய்ய 8/7 முதல் 10/7 வரையிலும் கால அவகாசம் வழங்கப்பட்டது. இதில் அழைக்கப்பட்ட

9872 பேரில் 7734 பேர் கட்டணம் செலுத்தியுள்ளனர். இதில் கல்லூரி/பாடப்பிரிவு தேர்வு செய்து பதிவிட்டுள்ளோர் மொத்தம் 7705 பேர்.

அதன்படி, ஜூலை 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை Choice Locking செய்தவர்களுக்கு 11/7 அன்று தற்காலிக ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளது. மாணாக்கர்கள் தங்களது Login ID , Password-ஐ பயன்படுத்தி இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். மாணாக்கர்கள் தங்களது தற்காலிக ஒதுக்கீட்டை உறுதி செய்ய கடைசி நாள் 12-ஆம் தேதி மாலை 5.00 மணி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து 13-ஆம் தேதி சனிக்கிழமை காலை நிரந்தர ஒதுக்கீட்டு ஆணையை இணையதள வாயிலாக மாணாக்கர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஆகவே, முதல் சுற்றில் 11-ஆம் தேதி தற்காலிக ஒதுக்கீடு பெற்ற அனைவரும் 12-ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள் தங்கள் Choice-ஐ கட்டாயமாக உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு உறுதி செய்யாத மாணாக்கர்களின் கேட்பு முதல் சுற்றில் நிராகரிக்கப்பட்டு 2வது சுற்றுக்கு கொண்டு செல்லப்படும். எனவே, அனைத்து முதல் சுற்றில் தற்காலிக ஒதுக்கீடு பெற்றவர்கள் கட்டாயம் உறுதி செய்தல் வேண்டும். இதில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் 044-22351014, 044-22351015, 044-22350523, 044-22350527 மற்றும் 044-22350529 என்ற தொலைபேசியில் தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தை தொடர்பு கொள்ளலாம் என மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**